**முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், சங்கரன்கோவில்,**

**முன்னிலை : திருமதி.M.அலிமா, B.A.,L.L.M.,**
முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி,
சங்கரன்கோவில்.

2026 ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் 12 ஆம் நாள் வியாழக்கிழமை

**இ.ம.எண்.11/2026 மற்றும் 12/2026**

in

**அசல் வழக்கு எண்.406/2015**

சாந்தம்மாள் ....மனுதாரர்/வாதி

அந்தோணி
(வாதிக்கு பவர் ஏஜெண்டு நிலமையில்)

/எதிர்/

1. தங்கமணி
2. கடற்கன்னி
3. பரமசிவன் (இறந்தவர்)
4. சின்னமாரியப்பன் (இறந்தவர்)
5. சண்முகவேல்
6. ஜெபசிங்
7. பால்ராஜ்
8. வேதமாணிக்கம்
9. அப்பாத்துரை
10. தாயம்மாள்
11. நாகராஜ்
12. நாகையா
13. நாகப்பன்
14. நாகேந்திரன்
15. நாகர்
16. அந்தோணியம்மாள்
17. மகேஸ்வரி
18. ராஜேஸ்
19. அருண் ....எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள்

ALIMA M

Digitally signed by ALIMA M
Date: 2026.02.12 17:08:26 +0530

இம்மனுக்களானது 10.02.2026 தேதியன்று இந்நீதிமன்றத்தின் முன்பாக இறுதியான விசாரணைக்கு வந்தபோது, மனுதாரர்/வாதி தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.R.S.S.பிரதாப்ராஜ் அவர்கள் ஆஜராகியும், 1, 2 எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.S.புஷ்பராஜ் அவர்கள் ஆஜராகியும், 3, 4 எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள் காலம்சென்றவிட்ட நிலையிலும், 5 முதல் 19 எதிர்மனுதாரர்கள் அசல் வழக்கில் தோன்றாத் தரப்பினர்களாக தீர்மானிக்கப்பட்டுள்ள நிலையில், இம்மனுவை பொறுத்தும் தோன்றாத்தரப்பினர்களாக கருதப்பட்டும், 1, 2 எதிர்மனுதாரர்கள் தரப்பில் No Counter allowed on terms என மேற்குறிப்பு செய்யப்பட்ட நிலையிலும், மனு மற்றும் அசல் வழக்கு கோப்பினை பரிசீலனை செய்தும், மனுதாரர் தரப்பு வாத உரையை கேட்டறிந்தும், இதுநாள் வரையில் இந்நீதிமன்ற பரிசீலனையின் கீழ் இருந்து வந்த இம்மனுக்களில் இன்று இந்நீதிமன்றம் வழங்கும்,

<u>பொதுவான உத்தரவு</u>

மனுதாரரால் இம்மனுக்களானது உரிமையியல் நடைமுறைச் சட்டம் பிரிவு 151 மற்றும் கட்டளை 3 விதி 2 பிரிவு 151–ன் கீழ், இவ்வழக்கின் வாதியான மனுதாரருக்கு இரு காதுகளும் சரியாக கேட்காத காரணத்தினால், வழக்கை சாட்சியம் அளித்து மேல்நடத்திக்கொள்ள மனுதாரரின் மகன் அந்தோணி என்பவருக்கு 27.01.2026 தேதியில் பொது அதிகார ஆவணம் பிறப்பித்துக் கொடுத்துள்ளதால், மனுதாரர் ஏற்கனவே வா.சா.1 ஆக அளித்துள்ள முதல்நிலை சாட்சியத்தை Struck Off செய்து மனுதாரரின் மகன் அந்தோணி என்பவருக்கு 27.01.2026 தேதியில் ஒரு பொது அதிகார ஆவணம் பிறப்பித்துக் கொடுத்துள்ளதை ஏற்றுக்கொண்டு, மேற்படியார் சாட்சியம் அளித்து வழக்கை தொடர்ந்து மேல்நடத்திக்கொள்ள உத்தரவிடவேண்டி இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டுள்ளன.

**<u>1)மனுதாரர்/வாதி தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட இ.ம.எண்.11/2026 மற்றும் 12/2026–ன் மனுக்களின் சுருக்கம்:–</u>**

மனுதார் அசல் வழக்கில் வாதி என்றும், இவ்வழக்கை பிராதின் 2 வது தபசில் உபயவாதிகளுக்கும் உள்ள பொதுநடை பாதையைப் பொறுத்து

ALIMA M
Digitally signed by ALIMA M
Date: 2026.02.12 17:08:33 +0530

விளம்புகையும், அதற்கு அனுசரணையான நிரந்தர ஏவு கட்டளையும் மற்றும் 3ம் தபசில் அமைப்பை அப்புறப்படுத்திக் கொள்ள வலியுறுத்துக்கட்டளை ஆகிய பரிகாரங்கள் கோரி மனுதாரர் வழக்கை தாக்கல் செய்துள்ளதாகவும், இவ்வழக்கும் விசாரணைக்கு எடுக்கப்பட்டு, மனுதாரர் வா.சா.1 ஆக சாட்சியாக முதல்நிலை சாட்சியம் அளித்துள்ளதாகவும், அதோடு வா.சா.ஆ.1 முதல் வா.சா.ஆ.15 வரை ஆவணங்களும் குறியீடு செய்யப்பட்டு, வா.சா.1 சாட்சியான மனுதாரரை குறுக்கு விசாரணை செய்ய வாய்தா ஏற்பட்டுள்ளது என்றும், மனுதாரருக்கு வயோதிகத்தின் காரணமாக தற்போது சரியாக காது கேட்கவில்லை என்றும், எனவே, இவ்வழக்கில் வா.சா.1 ஆன மனுதாரரால் குறுக்கு விசாரணை சாட்சியம் அளிக்க முடியாத நிலை ஏற்பட்டுள்ளதால், மனுதாரருக்கு பதிலாக மனுதாரரின் மகன் அந்தோணி என்பவருக்கு 27.01.2026 தேதியில் இவ்வழக்கை மேல்நடத்துவதற்கு ஒரு பொது அதிகார ஆவணம் பிறப்பித்துக் கொடுத்துள்ளதாகவும், ஆகையால், இவ்வழக்கின் வாதியான மனுதாரருக்கு இரு காதுகளும் சரியாக கேட்காத காரணத்தினால், வழக்கை சாட்சியம் அளித்து மேல்நடத்திக்கொள்ள மனுதாரரின் மகன் அந்தோணி என்பவருக்கு 27.01.2026 தேதியில் பொது அதிகார ஆவணம் பிறப்பித்துக் கொடுத்துள்ளதால், மனுதாரர் ஏற்கனவே வா.சா.1 ஆக அளித்துள்ள முதல்நிலை சாட்சியத்தை Struck Off செய்து மனுதாரரின் மகன் அந்தோணி என்பவருக்கு 27.01.2026 தேதியில் ஒரு பொது அதிகார ஆவணம் பிறப்பித்துக் கொடுத்துள்ளதை ஏற்றுக்கொண்டு, மேற்படியார் சாட்சியம் அளித்து வழக்கை தொடர்ந்து மேல்நடத்திக்கொள்ள உத்தரவிடவேண்டி மனுதாரர் தரப்பில் இம்மனுக்கள் இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டுள்ளன.

2) இம்மனுவின் 1, 2 எதிர்மனுதாரர்கள் தரப்பில் No Counter allowed on terms என கற்றறிந்த வழக்கறிஞரால் மேற்குறிப்பு செய்யப்பட்டுள்ளது.

3) <u>**தீர்வுக்குரிய பிரச்சனை:-**</u>

இம்மனுக்களானது அனுமதிக்கப்படத்தக்கதா? என்பதேயாகும்.

ALIMA M Digitally signed by ALIMA M Date: 2026.02.12 17:08:41 +0530

4) மனுதாரர்/வாதி தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட மனுக்கள், அசல் வழக்கு கோப்பு மற்றும் மனுதாரர் தரப்பு வாதஉரை ஆகியவைகள் பரிசீலனை செய்யப்பட்டன.

5) மனுதாரரால் இம்மனுக்களானது, இவ்வழக்கின் வாதியான மனுதாரருக்கு இரு காதுகளும் சரியாக கேட்காத காரணத்தினால், வழக்கை சாட்சியம் அளித்து மேல்நடத்திக்கொள்ள மனுதாரரின் மகன் அந்தோணி என்பவருக்கு 27.01.2026 தேதியில் பொது அதிகார ஆவணம் பிறப்பித்துக் கொடுத்துள்ளதால், மனுதாரர் ஏற்கனவே வா.சா.1 ஆக அளித்துள்ள முதல்நிலை சாட்சியத்தை Struck Off செய்து மனுதாரரின் மகன் அந்தோணி என்பவருக்கு 27.01.2026 தேதியில் ஒரு பொது அதிகார ஆவணம் பிறப்பித்துக் கொடுத்துள்ளதை ஏற்றுக்கொண்டு, மேற்படியார் சாட்சியம் அளித்து வழக்கை தொடர்ந்து மேல்நடத்திக்கொள்ள உத்தரவிடவேண்டி இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டுள்ளன.

6) அசல் வழக்கு கோப்பினை பரிசீலிக்கும்போது, அசல் வழக்கானது வாதியால் பிரதிவாதிகளுக்கு எதிராக விளம்புகை, நிரந்தர உறுத்துக்கட்டளை மற்றும் வலியுறுத்துக்கட்டளை பரிகாரங்கள் கோரி இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. அசல் வழக்கில் வாதி தரப்பில் வா.சா.1ன் குறுக்கு விசாரணை சாட்சியத்திற்காக வழக்கு ஒத்தி வைக்கப்பட்டுள்ள நிலையில் மனுதாரரால் இம்மனுக்கள் இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டுள்ளன.

7) மேலும், மனுதாரரால் இம்மனுக்களுடன் 27.01.2026 தேதியில் மனுதாரரால் தனது மகன் அந்தோணி என்பவருக்கு எழுதிக்கொடுத்த பொது அதிகார ஆவணத்தின் அசல் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

8) அசல் வழக்கில் வாதிக்காக பொது அதிகார முகவர் நிலமையில் வாதியின் மகனான அந்தோணி என்பவரை வழக்கை மேல்நடத்த வேண்டும் என்பதற்கு மனுதாரரால் மனுக்களில் சொல்லப்படும் காரணம்

ALIMA M
Digitally signed by ALIMA M
Date: 2026.02.12 17:08:49 +0530

இந்நீதிமன்றத்தால் ஏற்றுக்கொள்ளக்கூடியதாக உள்ளது. மேலும், இம்மனுக்களுக்கு பிரதிவாதிகள் தரப்பிலும் ஆட்சேபணை எதுவும் தெரிவிக்கப்படவில்லை.

9) இருப்பினும், இம்மனுக்களில் மனுதாரர் தரப்பில் மனுதாரரின் மகனான பொது அதிகார முகவரை மனுதாரருக்காக சாட்சியம் அளிக்க அனுமதிக்க வேண்டும் என தெரிவிக்கப்பட்டுள்ளது. மனுதாரரின் மகனான பொது அதிகார முகவர் மனுதாராரருக்காக சாட்சியம் வழங்க தகுதி வாய்ந்த நபரா? இல்லையா? என்பது குறித்து இம்மனுவில் இந்நீதிமன்றத்தால் முடிவு காண இயலாது.

10) எனவே, மேற்கண்ட பரிசீலனையிலிருந்து, இ.ம.எண்.12/2026 மனுவை பொறுத்தமட்டில் பகுதியாக அனுமதிக்கப்பட்டு, மனுதாரரால் பிறப்பிக்கப்பட்ட பொது அதிகார ஆவணத்தின் அடிப்படையில் மனுதாரரின் மகன் மனுதாரருக்காக அசல் வழக்கை தொடர்ந்து மேல்நடத்திக்கொள்ள மட்டும் இம்மனுவில் அனுமதி வழங்கியும், மனுதாரர் ஏற்கனவே வா.சா.1 ஆக அளித்துள்ள முதல்நிலை சாட்சியத்தை Struck Off செய்தும், இம்மனுக்களுக்கு இந்நீதிமன்றத்தால் நீதியின் நலன்கருதி முடிவு காணப்படுகிறது.

<u>11) இறுதியாக</u>

<u>இ.ம.எண்.11/2026</u>

இம்மனுவானது அனுமதிக்கப்படுகிறது. தரப்பினர்கள் தங்களது செலவுத்தொகையை தாங்களே ஏற்றுக்கொள்ள வேண்டும் என உத்தரவிடப்படுகிறது.

<u>இ.ம.எண்.12/2026</u>

இம்மனுவானது பகுதியாக அனுமதிக்கப்படுகிறது. மனுதாரரால் பிறப்பிக்கப்பட்ட பொது அதிகார ஆவணத்தின் அடிப்படையில் மனுதாரரின் மகன் மனுதாரருக்காக அசல் வழக்கை தொடர்ந்து மேல்நடத்திக்கொள்ள

ALIMA M
Digitally signed by ALIMA M
Date: 2026.02.12 17:08:58 +0530

மட்டும் இம்மனுவில் அனுமதி வழங்கி உத்தரவிடப்படுகிறது. தரப்பினர்கள் தங்களது செலவுத்தொகையை தாங்களே ஏற்றுக்கொள்ள வேண்டும் என உத்தரவிடப்படுகிறது.

இந்த உத்தரவு என்னால் சுருக்கெழுத்தருக்கு சொல்லப்பட்டு, அவரால் நேரடியாக கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழை நீக்கம் செய்யப்பட்டு, 2026 ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் 12 ம் நாள் இந்நீதிமன்றத்தில் அவையறியப் பகரப்பட்டது.

ALIMA M

Digitally signed by ALIMA M
Date: 2026.02.12 17:09:06 +0530

முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி,
சங்கரன்கோவில்.

**இருதரப்பு சாட்சி மற்றும் சான்றாவணங்கள் :–**

– இல்லை –

ALIMA M

Digitally signed by ALIMA M
Date: 2026.02.12 17:09:12 +0530

முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி,
சங்கரன்கோவில்.

மு.மா.உ. நீதிமன்றம்,
சங்கரன்கோவில்,
I.A.No.11/2026 and
I.A.No.12/2026
in
O.S.No.406/2015
உத்தரவு (Draft / Fair)
நாள் : 12.02.2026